## (ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1974-75 மற்றும் 1975-76 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளின் வணிகம் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் 1989-90 ஆம் ஆண்டு இரண்டாவது அறிக்கையில்கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய 37-வது அறிக்கை;

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளின் வணிகம், செய்தி மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழு 1986-87 அளித்த 53-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் 38-வது அறிக்கை;

1969-70 ஆம் ஆண்டு முதல் 1975-76 ஆம் ஆண்டு வரையிலான தமிழ்நாடு வீட்டுவசதித் தலைவரின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகளின் மீது பொது நிறுவனங்கள் குழுவின் 1986-87 45-ஆம் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் 39-வது அறிக்கை ஆகியவற்றை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

## (இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எ. ஏகாம்பரரெட்டி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

திரு. எ. ஏகாம்பரரெட்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 1991-92 ஆம் ஆண்டுக்கான 7-வது மற்றும் 8-வது அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தம் மற்றும் தனி-வகைமுறைகள்) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டு

றவுச் சங்கங்கள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) சட்ட முன்வடிவு. இதனைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவைப் பேரவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. மானியக் கோரிக்கைகள் 1992-93, விவாதமும் வாக்கெடுப்பும் —(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண் 23—கூட்டுறவு.

(ஆ) கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 23 கூட்டுறவு. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்.